**இலங்கை ஹரித தனவ் பிம் அபிவிருத்தி மத்திய அதிகாரசபை (இலங்கை ஹதபிம அதிகாரசபை) 2013.**

இலங்கை ஹரித தனவ் பிம் அபிவிருத்தி மத்திய அதிகாரசபையின் (இலங்கை ஹதபிம அதிகாரசபையின்) 2013 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புகளையும் உள்ளடக்கிய 2013 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 11 ஆம் இலக்க கமத்தொழிற் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2. நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வு நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவினது (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிவு அதிகாரத்தை வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்களானவை 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை ஹரித தனவ் பிம் அபிவிருத்தி மத்திய அதிகாரசபையின் (இலங்கை ஹதபிம அதிகாரசபையின்) நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

நிறுவகத்திற்குச் சொந்தமான சொத்துக்களை மீள்கணிப்பீடு செய்யப்படும் போது சம அணியிலுள்ள முழு சொத்துக்களையும் ஒரே தடவையில் மீள் கணிப்பீடு செய்து குறித்த சீராக்கங்களை கணக்கீடு செய்வதற்குப் பதிலாக வாகன அணியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சில வாகனங்களை மாத்திரம் 02 சந்தர்ப்பங்களில் மீள் கணிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

கமநல பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடன் மீதி மற்றும் வங்கி/ காசு மீதி ரூபா 334,400 தொகை குறைத்து கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த உயிரியல் இருப்புக்களின் பெறுமதி மற்றும் பௌதீக இருப்பு மெய்மையாய்வு அறிக்கை என்பவற்றிற்கிடையே ரூபா 155,235 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**2.2.4 பெற வேண்டிய, செலுத்த வேண்டிய கணக்குகள்**

(அ) 08 ஊழியர்களுக்கு இடர் கடன் முற்பணமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 119,361 ஆன மீதியொன்று 2009 ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை அறவிடப்படாமல் காணப்பட்டது.

(ஆ) 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாதிருந்த ரூபா 2,147,782 ஆன கடன்மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

**2.3. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பந்தி மற்றும் நிதிப் பிரமாணம் 381 | விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்துடனும் நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டுடனும் வங்கிக் கணக்குகளை திறக்க வேண்டிய போதிலும், அதற்கு இணங்காத வகையில் அதிகாரசபையால் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் ரூபா |

| | | |
|---|---|---|
| | | 24,263,555 பெறுமதியான 33 வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப் பட்டிருந்தன. |
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | சுற்றறிக்கையின் பிரகாரம் அதிகார சபையால் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1. நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் நிதி விளைவுகள் ரூபா 23,704,832 மிகையாக இருந்ததுடன், இதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 32,554,452 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 56,259,284 தொகையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1. செயலாற்றல்

அதிகாரசபையின் தலைமை அலுவலகத்திற்கு அருகாமையில் நடாத்திச் செல்லப்படும் விற்பனைச்சாலையில் 2012 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் தேறிய மிகை ரூபா 3,851,123 ஆல் அல்லது 48 சதவீத குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

### 4.2 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

(அ) 2013 ஆம் ஆண்டின் போது செல்மொநெல்லா என்ற நோய் பரவியதன் காரணமாக கோழிகள் அதிகளவில் இறந்ததன் காரணமாக கோழிப்பண்ணையில் உள்ள அனைத்துக் கோழிகளையும் அகற்றி விசக்கிருமிகளை ஒழித்து புதிதாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென கால்நடை சுகாதார வைத்தியரால் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. எனினும் 2014 மே 22 ஆம் திகதி வரையில் 06 பழைய வகைக்குரிய 138 கோழிகளும் 6300 கோழிக்குஞ்சுகளும் கொள்வனவு செய்யப்பட்டு பண்ணையில் வைத்திருக்கப்பட்டன.

(ஆ) 1991 நவம்பர் 07 ஆம் திகதிய 687/15 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் விவசாய பல்வகைப்படுத்தல் மற்றும் ஜனவாச தேசிய அதிகாரசபை, இலங்கை ஹரித தனவ் பிம் அபிவிருத்தி மத்திய அதிகாரசபை என மாற்றப்பட்டது. விடய பரப்பிற்குள்ளான மாற்றங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட புதிய செயல் நடைமுறைக்கோவை 2014 ஒக்தோபர் 31 ஆம் திகதி வரையில் வரைவு அறிக்கையாக காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டில் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த பரிந்துரைகள் எதுவும் 2014 ஒக்தோபர் 31 ஆம் திகதி வரையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

(அ) 2012 ஆம் ஆண்டில் விவசாய அமைச்சின் நிதிஏற்பாட்டினைக் கொண்டு இராணுவத்தின் பங்களிப்புடன் காணி அபிவிருத்தி மற்றும் பயிர் விளைச்சல் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக 05 பிரதான ஆக்கக்கூறுகளின் கீழ் 6 உப ஆக்கக்கூறுகளுக்கு ரூபா 11.83 மில்லியன் மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அச்செயற்திட்டத்தின் பிரதான ஆக்கக்கூறான நீர் வசதிகள் அபிவிருத்தி

முழுமையாக கைவிடப்பட்டிருந்ததுடன், விவசாய அமைச்சின் செயலாளரின் பல்வகைப்படுத்தலுக்கு இணங்காத வகையில் ரூபா 1.9 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) இறக்குமதி செய்யப்படும் மிளகாய் அளவை குறைத்துக்கொள்ளும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு சுழற்சி ரீதியான பங்களிப்பை வழங்கும் நோக்கில் 3 அடிப்படை ஆக்கக்கூறுகளின் கீழ் 2013 ஆம் ஆண்டில் விவசாய அமைச்சின் நிதிஏற்பாட்டின் அடிப்படையில் 1000 ஏக்கரில் மிளகாய் பயிர்ச்செய்கை செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இங்கு நீர் வசதிகள் அபிவிருத்திக்காக ரூபா 2,400,000 தொகை மற்றும் சேதனப் பசளை வழங்கலுக்காக ரூபா 2,160,000 தொகை என்ற வகையில் 02 பிரதான ஆக்கக்கூறுகள் முழுமையாக கைவிடப்பட்டு, ரூபா 1,182,239 செலவு செய்து உள்நாட்டு விதைகளை வழங்குதல் என்ற செயற்பாடு மாத்திரம் செயற்படுத்தியதன் மூலம் எதிர்பார்த்த இலக்கு அடையப் பெற்றிருக்கவில்லை.

(இ) விற்பனை செய்யும் நோக்கில் நடாத்தப்பட்டு வந்த நாற்று மேடையில் 03 மாத நாற்றுக்கள், 06 மாத நாற்றுக்கள் என்ற வகையில் குறித்த காலப்பகுதியில் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் நாற்றுக்கள் உறுதிப்படுத்தல் சேவையொன்று பேணப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக தரமான நாற்றுக்கள் எந்த அளவில் விற்பனை செய்யப்பட்டது என்பது தெளிவாகவில்லை.

**4.4 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

(அ) பல்லேகலை பண்ணைக் களஞ்சியத்தில் ரூபா 712,970 பெறுமதியான காலாவதியான இரசாயனப் பசளை மற்றும் விவசாய உபகரண இருப்பொன்றும் விலை இடப்படாத 3 உழவு இயந்திரங்களும் 3 டேலர்களும் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) கொத்மலை பண்ணையில் தாபிக்கப்பட்டுள்ள தாரா அலகு, 02 பசுமை வீடுகள், ஆடுகள் பிரிவு, மாடுகள் பிரிவு மற்றும் கை உழவு இயந்திரத்திற்குரிய பிடி என்பன 2014 மே 30 வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டன.

**4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

2013 ஆம் ஆண்டில் பல்லேகலை கோழிப் பண்ணில் தாய் பிராணிகளினதும் வளரும் பிராணிகளினதும் இறப்பு வீதம் அதிகரித்த போக்கினைக் காட்டியது. அதன் பிரகாரம் ரூபா 148,500 பெறுமதியான 104 தாய் கால்நடைகளும், 94 வளரும் கால்நடைகளும் இறந்து காணப்பட்ட போதிலும், அதற்காக கால்நடை வைத்திய அதிகாரியின் அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1. நிதிக்சுற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், 275 நாட்கள் தாமதத்தின் பின்னர் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**5.2 உள்ளகக் கணக்காய்வு**

அதிகாரசபையில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும், அப்பிரிவு நிரந்தர பதவியணியனரைக் கொண்டிருக்கவில்லை.

### 5.3 கணக்காய்வுக் குழு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையால் ஓராண்டிற்கு ஆகக் குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைக் குழுக் கூட்டம் கூட்டப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது மூன்று கணக்காய்வு மற்றும் முகாமைக் குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

### 5.4 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

அதிகாரசபைக்குரிய கிடைக்க வேண்டிய கணக்கில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2,094,280 தொகை தொடர்பாக 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுவின் கவனம் செலுத்தப்பட்டு தீர்வு செய்வதற்கு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2014 நவம்பர் 28 ஆம் திகதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது அதிகாரசபையின் தலைவருக்கு எனது அறிக்கைகள் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) நிதிஏற்பாடுகளைப் பயன்பாட்டிற்கு எடுத்தல்
(ஆ) விற்பனை நிலைய நிர்வாகம் மற்றும் நிதி முகாமைத்துவம்
(இ) பொருள் மெய்மையாய்வு
(ஈ) பண்ணை முகாமைத்துவம்